# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண். 9

## அறிவிப்புகள்
## 2017 – 2018


**சீ. வளர்மதி**

பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

புதிய அறிவிப்புகள்

2017 – 2018

## 1. புதிதாக கல்லூரி விடுதிகள் துவக்குதல்

**மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் நகர்ப்புறங்களில் **5** கல்லூரி விடுதிகள் **1** கோடியே **67** இலட்சத்து **96** ஆயிரம் ரூபாய் செலவில் புதிதாக துவக்கப்படும்.

## 2. தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு வழங்கப்படும் நிர்வாக மானியத்தினை உயர்த்துதல்

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு நிர்வாக செலவுகளை மேற்கொள்ள தமிழக அரசு ஆண்டுதோறும் நிர்வாக மானியமாக 1 கோடி ரூபாய் வழங்கி வருகிறது. தமிழ்நாடு வக்ஃப் வாரியம், தற்போது வக்ஃப் நிறுவனங்களின் செயல்பாடுகளை சீரமைக்கும் நடவடிக்கைகள், வக்ஃப் சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டல் போன்ற நடவடிக்கைகள் ஆகியவற்றை மேற்கொண்டு வக்ஃப் வாரியத்திற்கான வருவாயினை மேம்படுத்த துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் **மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ஆண்டு நிர்வாக மானியம் 1 கோடி ரூபாயிலிருந்து 2 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

## 3. அனைத்து பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளுக்கு விளையாட்டுப் பொருட்கள் வழங்குதல்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்கென தமிழ்நாடு முழுவதும் இயங்கி வரும் 1,338 பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் 84,314 மாணவ, மாணவியரின் உடல் நலன் மற்றும் மனநலன்களை மேம்படுத்துவதற்காக, **மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** 1,338 விடுதிகளிலும் உள்ளரங்கு விளையாட்டுப் பொருட்களும், மேலும் போதுமான இடவசதி உள்ள 300 விடுதிகளில் வெளியரங்கு விளையாட்டு வசதிகளும் 49 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

## 4. விடுதிகளில் பணிபுரியும் பகுதி நேர துப்புரவு பணியாளர்களுக்கு மாதாந்திர தொகுப்பூதியத்தினை உயர்த்துதல்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் 100 மாணவ, மாணவியர் வரை தங்கிப் பயிலும் 1,242 விடுதிகளில் பணிபுரியும் பகுதி நேர துப்புரவு பணியாளர்களுக்கு, **மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தற்போது வழங்கப்படும் மாதாந்திர தொகுப்பூதியம் 2,000 ரூபாயிலிருந்து, 3,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக 1 கோடியே 49 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 5. விடுதிகளில் புதிதாக பகுதி நேர துப்புரவு பணியாளர் பணியிடங்களை தொகுப்பூதியத்தில் ஏற்படுத்துதல்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் விடுதிகளுள் துப்புரவு பணியாளர் பணியிடங்கள் இல்லாத 28 விடுதிகளில், **மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** புதிதாக 28 பகுதி நேர துப்புரவு பணியாளர் பணியிடங்கள் மாதம் ஒன்றுக்கு 3 ஆயிரம் ரூபாய் தொகுப்பூதியத்தில் ஏற்படுத்தப்படும். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக 10 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**சீ. வளர்மதி**
பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்